**இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை – 2015**
-----------------------------------------------------------------------

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1995 இன் 12 ஆம் இலக்க இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 25 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**
-----------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**
--------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். உயர் கணக்காய்வு நிறுவனத்தின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள்

**(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16**

(i) சொத்தொன்று பயன்பாட்டிற்காக தயார்படுத்தப்பட்ட நிலைக்கு உட்பட்டதன் பின்னர் அதன் பெறுமானத்தேய்வு ஆரம்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அதிகாரசபையினால் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டை அடிப்படையாகக் கொண்டு பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தது.

(ii) நியமத்தின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களின் இழிவுப் பெறுமதி மற்றும் பயன்தரு ஆயுட்காலம் என்பவற்றைப் போல பெறுமானத்தேய்வும் ஒவ்வொரு வருட இறுதியிலும் மீளாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும் அதனைக் கவனத்தில் கொள்ளாது அதிகாரசபையினால் ஒவ்வொரு சொத்துத் தொகுதிக்காகவும் பொது விகிதம் பயன்படுத்தப்பட்டு சொத்துக்கள் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) 2009 ஆம் ஆண்டின் பின்னர் சொத்துக்களை அகற்றல் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற ரூபா 7,170,061 பெறுமதியான ஏனைய செலுத்த வேண்டியவைகள் தொடர்பாக கடன்கொடுத்தோர் பட்டோலை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 34,825,040 கடன்பட்டோர் மீதியில் ரூபா 3,177,689 தொகையான 07 மீதிகள் 1 முதல் 5 வருடங்கள் வரையான காலத்தினையும், ரூபா 7,068,641 தொகையான 21 கடன்பட்டோர் மீதிகள் 05 முதல் 13 வருடங்கள் வரையிலான காலத்தையும் விஞ்சியிருந்தன. இதில் ரூபா 3,035,710 அரசாங்க நிறுவனங்களிலிருந்து அறவிடப்பட வேண்டியிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்த வேண்டிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 90,775,779 ஆக இருந்ததுடன் அவற்றுள் ரூபா 265,000 தொகை 05 வருடங்களுக்கு மேலாகாகவும், ரூபா 13,313,061 தொகை 03 முதல் 05 வருடங்கள் வரையான காலமும் ரூபா 19,969,169 தொகை 01 முதல் 03 வருடங்கள் வரையான காலப்பகுதியினையும் கடந்திருந்த போதிலும் அவற்றைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவை | |
| IX ஆம் அத்தியாயத்தின் 2.2 ஆம் பிரிவு | நிறுவனத்தின் நிரந்தர விரிவுரையாளர் பதவியணியினால் மேற்கொள்ளப்படுகின்ற பகுதிநேர பயிற்சி பாடநெறிகளுக்கான விரிவுரிரைகளுக்காக வழங்கப்பட்ட ரூபா 168,835 தொகையான கொடுப்பனவுகளிலிருந்து 10 சதவீத அரசிறை கழிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 104 மற்றும் 110 | இரத்மலானை தேசிய தொழிற்பயிற்சி நிலையத்தின் கணனி மென்பொருள் பாடநெறிக்குரிய 2 கணனி இயந்திரங்கள் 2015 சனவரி 15 ஆந் திகதி தொலைந்து போயிருந்ததுடன் அது தொடர்பில் உரிய பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 188(2) | 2009 ஆம் ஆண்டில் வைப்புச் செய்யப்பட்டிருந்த போதும் தேறாதிருந்த ரூபா 49,644 தொகையான 2 காசோலைகள் மற்றும் 2013 ஆம் ஆண்டில் வைப்புச் செய்யப்பட்டிருந்தும் கணக்கில் செலவு |

வைக்கப்படாதிருந்த ரூபா 320,915 தொகையான பண வைப்புக்கள் தொடர்பாக 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | | |
|---|---|---|
| (iii) | நிதிப்பிரமாணம் 385 | வங்கிக் கணக்கொன்றிலிருந்து ரூபா 500 அல்லது அதற்கு மேற்பட்ட தொகையொன்றைச் செலுத்தும் போது அது காசாகச் செலுத்த முடியாதிருந்த போதும் 8 சந்தர்ப்பங்களின் போது ரூபா 86,400 வரையான பகுதிநேர பாடநெறி விரிவுரையாளர் கட்டணங்கள் காசாகச் செலுத்தப்பட்டிருந்தமை தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. |
| (இ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3.1(vii) ஆம் பிரிவு | ஏதாவதொரு காரணத்தின் அடிப்படையில் பதில் கடமை நியமனம் வழங்கப்படுமானால் 03 மாதங்களை விஞ்ச முடியாதிருந்த போதிலும் அதற்கு முரணாக 04 வருடங்கள் வரை பதில் கடமை நியமனங்கள் வழங்கப்பட்ட 04 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |

## 2.5 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முறையான அங்கீகாரமின்றி தேசிய தொழிற்பயிற்சி நிலையமொன்றில் 2015 மார்ச் 11 முதல் பகுதிநேர பயிற்சி பாடநெறியொன்று நடாத்தப்பட்டிருந்ததுடன் பயிலுனர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட ரூபா 42,700 தொகையை 04 மாதங்கள் கடந்தும் காசாளருக்குக் கையளிக்கப்படாது விரிவுரையாளர்களின் பொறுப்பில் விடப்பட்டிருந்தது.

(ஆ) 2011 ஆம் ஆண்டின் போது உலக சுற்றுலா தினத்தை கொண்டாடுவதற்காக செலசினே நிறுவனத்திற்குச் செலுத்துவதற்காக 2012 பெப்ரவரி மாதத்தின் போது ரூபா 7,500,000 தொகை இலங்கை சுற்றுலா அபிவிருத்தி நிறுவனத்திலிருந்து கிடைத்திருந்தது. அதில் கொடுப்பனவுகளைச் செய்ததன் பின்னர் சேமிக்கப்பட்ட ரூபா 1,000,000 முறையான அங்கீகாரமின்றி மீளாய்வாண்டின்போது அதிகாரசபையின் வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்தது.

(இ) 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவின் பிரகாரம் திறைசேரியின் அங்கீகாரமின்றி அதிகாரசபையின் பயிலுனர்களுக்காக காப்புறுதி நிதியமொன்றை தாபிப்பதற்காக பயிலுளர்களிடமிருந்து 2013 ஆம் ஆண்டு முதல் 2015 திசெம்பர் 31 வரை ரூபா 24,905,500 சேகரிக்கப்பட்டு அதிகாரசபையின் வங்கிக் கணக்கொன்றில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 75,332,248 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 76,456,852 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதிவிளைவுகளில் ரூபா 1,124,604 அதிகரிப்பொன்று ஏற்பட்டிருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது பதவியணியினர் கிரயம் ரூபா 287,078,707 இனாலும், உடன்படிக்கை செய்யப்பட்ட சேவைச் செலவினம் ரூபா 4,815,454 இனாலும், பாதுகாப்புச் சேவைச் செலவினம் ரூபா 10,536,480 இனாலும் அதிகரித்திருந்த போதிலும் வழங்கல் மற்றும் நுகர்வோர் சேவைகள் ரூபா 8,514,189 இனாலும் ஏனைய செயற்பாட்டுச் செலவினம் ரூபா 17,817,128 இனாலும் குறைவடைந்தமை மற்றும் திறைசேரி நிதிஏற்பாடு ரூபா 236,753,539 இனால் அதிகரித்தமை மேற்கூறப்பட்ட அதிகரிப்பு தொடர்பில் பிரதானமாகத் தாக்கமளித்திலிருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 4 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2012 ஆம் ஆண்டின் போது நிதி மிகையும் ஏனைய ஆண்டுகளில் பற்றாக்குறையும் ஏற்பட்டிருந்தன. எவ்வாறாயினும் ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கவனத்தில் கொள்ளும் போது 2013 ஆம் ஆண்டில் ரூபா 1,023,595,450 தொகையான நிறுவனத்தின் பங்களிப்பு மீளாய்வாண்டின் போது ரூபா 1,338,404,900 வரை தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது.

### 3.2 நிறுவனத்திற்கு எதிராகவும் நிறுவனத்தினாலும் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டரீதியான விடயங்கள்

மீளாய்வாண்டின் இறுதியில் ஊழியர்களினால் நிறுவனத்திற்கு எதிராக 07 வழக்குகளும், சேவையை கைவிட்டுச் சென்ற பணிப்பாளருக்கு (நிதி) எதிராக நிறுவனத்தினால் 02 வழக்குகளும் தொடரப்பட்டிருந்ததுடன் ஆண்டின் போது ரூபா 713,508 தொகை சட்டச் செலவினமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) (i) 1995 இன் 12 ஆம் இலக்க இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், தொழிற்பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துதல் மற்றும் பயிற்சியொன்றை வழங்குதல், தொழிற்பயிற்சி மற்றும் ஊழியச் சந்தை தொடர்பான ஆராய்ச்சிகளை நடாத்துதலும் அபிவிருத்தி செய்தலும், அரசாங்க மற்றும் தனியார் துறையின் தொழிற்பயிற்சி நடவடிக்கைளை தொடர்புபடுத்துதல், வழிகாட்டியும் ஆலோசனையும், வேலைக்கமர்த்தல், தேசிய மற்றும் சர்வதேச பயிற்சி அமைப்புக்கள் மற்றும் நிறுவனங்களுடன் தொடர்புகளைப் பேணிக் கொள்ளல் மற்றும் தொழிற்பயிற்சிக்காக தேவையான பயிற்சியாளர்களைப் பயிற்றுவித்தல் போன்ற நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு அதிகாரசபையினால் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த

போதிலும், மீளாய்வாண்டின் போது ஊழியச் சந்தையின் தேவை மற்றும் வழங்கல்கள் தொடர்பான ஆராய்ச்சிகள் நடாத்தப்படாதிருந்ததுடன் சர்வதேச தொடர்புகளைப் பேணிச் செல்வதற்காகவும் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் ஊழியச் சந்தையில் தேவை காணப்படுகின்ற துறைகளின் பிரகாரம் இனங்காணப்பட்ட பாடநெறிகளுக்காக பயிலுனர்களைக் கவர்வதற்காகவும் பயிற்சியளிப்பதற்காகவும் பொருத்தமான நிகழ்ச்சித்திட்டம் அதிகாரசபையினால் அமுல்படுத்தப்படாதிருந்ததுடன் அப்பாடநெறிக்காக பயிலுனர்களின் பங்குபற்றல் விதம் கீழ் மட்டத்தில் காணப்பட்டது.

(ii) குளிரூட்டி மற்றும் காற்று சமநிலையாக்கிகளை பழுதுபார்த்தல், இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள், உணவுத் தொழில்நுட்பம் தோற்பொருட்களும் பாதணிகளும், கடற்றொழிலும் வர்ண மீன்கள் மற்றும் அச்சிடல் போன்ற தொழில்சார் துறைகளில் மீளாய்வாண்டின் போது பயிற்சியளிக்கப்பட்டிருந்த பயிலுனர்களின் எண்ணிக்கை ஒட்டுமொத்த எண்ணிக்கையில் 5 சதவீதத்திற்கு குறைவாக இருந்தது.

(ஆ) கடந்த 3 வருடங்களில் பாடநெறிகளை நடாத்துதல் மற்றும் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) 2013 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை முறையே 28446, 28692 மற்றும் 28745 பயிலுனர்கள் பயிற்சிக்காக சேர்க்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் பயிலுனர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஒரு சதவீதத்தைவிட குறைவாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. நடாத்தப்பட்ட பாடநெறிகளின் எண்ணிக்கை 1925, 1939 மற்றும் 1952 ஆனமையால் அந்த ஆண்டுகளின் போது பாடநெறிகளின் அதிகரிப்பும் ஒரு சதவீதத்தைவிட குறைவாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) தொழிற் தகைமை மட்டத்திற்காக (NVQ) தரப்படுத்தப்படாத பாடநெறிகளின் எண்ணிக்கை 2013 ஆம் ஆண்டின் போது 522 முதல் 2015 இன் போது 198 வரை குறைக்கப்பட்டிருந்ததுடன் தொழிற்திறனின் 4 ஆம் மட்ட பாடநெறிகள் 2013 இன் போது 383 முதல் 775 வரை அதிகரித்திருந்தமை நல்லதொரு முன்னேற்றமாக இருந்தது.

(iii) 2015 ஆம் ஆண்டிற்காக 2405 முழுநேர மற்றும் பகுதிநேர பாடநெறிகளை நடாத்துவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், 1952 பாடநெறிகள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் 453 பாடநெறிகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(iv) பயிலுனர்களின் எண்ணிக்கை 5 மற்றும் அதற்குக் குறைவாக சேர்க்கப்பட்டிருந்த பாடநெறிகளின் எண்ணிக்கை 28 ஆகும்.

(இ) திறன்சார்ந்த அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழுள்ள செயற்பாடுகளின் செயலாற்றல்.

(i) மீளாய்வாண்டின் இறுதிவரையில் 60 பயிற்சி நிலையங்களில் 60 வியாபார அலகுகளை (Business Unit) ஆரம்பிப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், 07 நிலையங்களில் மாத்திரம் நடவடிக்கை எடுத்து ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

(ii) திறன்சார்ந்த அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் 2015 திசெம்பர் 31 வரையில் ஆட்சேர்க்கப்பட வேண்டிய பதவியணியினர் 167 ஆக இருக்க வேண்டிய போதிலும் 43 உத்தியோகத்தர்கள் மாத்திரம் சேர்க்கப்பட்டமையின் காரணமாக அடையப்படாத இலக்கு 75 சதவீதமாகும். ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட 25 விரிவுரையாளர்களுக்கிடையே 11 பேர் நிறுவனத்திலிருந்து விலகிச் சென்றிருந்ததுடன், மேலும் 7 விரிவுரையாளர்கள் இலக்கிடப்பட்ட நிலையங்களில் பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், சேவைக்கு இணைக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) செயற்திட்ட திட்டமிடலின் கீழான ஆட்சேர்ப்புகளுக்கு மேலதிகமாக 2015 ஆம் ஆண்டில் அதிகாரசபையினால் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட 43 விரிவுரையாளர்களுக்காக பாதீட்டு நிதிஏற்பாடு ஒதுக்கப்படாமையினால் 2015 ஆம் ஆண்டில் அந்த உத்தியோகத்தர்களின் சம்பளத்திற்காக ரூபா 13,147,737 தொகை செயற்திட்டத்தின் மூலம் செலுத்தப்பட்டிருந்தது.

(iv) செயற்திட்டத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்ட 07 நிலையங்களில் 40 புதிய பாடநெறிகளை ஆரம்பிப்பதற்கும் அந்த பாடநெறிகளுக்காக தேவையான சகல உபகரணங்களை வழங்குவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், 2015 திசெம்பர் 31 வரையும் இதில் 26 பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(v) அதிகாரசபையில் காணப்படுகின்ற முகாமைத்துவ தகவல் முறைமையின் மீளாய்வு மற்றும் அபிவிருத்தி பயிலுனர்களின் பதிவு, நிதி, களஞ்சியம் நிர்வாக மற்றும் நூலக நடவடிக்கைகளை முறையாக வெளிப்படுத்தும் வகையில் கணனி வலைப்பின்னலொன்றை ஸ்தாபித்தல் நோக்கமாக இருந்த போதிலும் அவ்வாறான தகவல் முறைமையொன்றை தயாரிக்கும் நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) செயற்திட்டத்தின் நோக்கமான வெளிநாட்டு வேலைவாய்ப்பை இலக்காகக் கொண்டு புதிய பயிற்சி பாடநெறிகளை அபிவிருத்தி செய்வதற்காக அதிகாரசபையினால் மீளாய்வாண்டின்போது வேலைத் திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(vii) செயற்திட்டத்தின் திட்டப் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் 10 புதிய பயிற்சி நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் ஒரு நிலையத்தின் நிர்மாணம் மாத்திரம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய 50 நிலையங்களில் 12 நிலையங்கள் மாத்திரம் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தன.

(viii) தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டதன் பிரகாரம் கொழும்பில் அமைந்துள்ள தேசிய நிலையமொன்றில் முழுநேர மோட்டார் வாகன மின்னியல் பயிலுனர் பாடநெறியின் 2012 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் குழுக்களுக்கு பயிலுனர் சான்றிதழ் பத்திரங்கள் 2016 ஒக்தோபர் 26 ஆந் திகதி வரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 1995 இன் 12 ஆம் இலக்க இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 15(1) ஆம் பிரிவின் மூலம் தொழிற்பயிற்சி சபையை தாபித்தல் தொடர்பாக குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் 1996 ஏப்ல் 30 ஆந் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானியில் தொழிற்பயிற்சி சபை தாபித்தலுக்குரிய கட்டளை வழங்கப்பட்டிருந்த போதிலும், 2015 திசெம்பர் 31 வரையும் அவ்வாறான சபை தாபிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும்

பாடநெறியை ஆரம்பித்தலும் நிறுத்தலும் முறையான அடிப்படையின்றி மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(உ) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் செயற்பாட்டிலுள்ள தொழிற் பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கை முறையே 275 மற்றும் 251 ஆக இருந்ததுடன் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அந்த எண்ணிக்கை 247 வரை குறைவடைந்திருந்தது.

(ஊ) புத்தளம் மாவட்ட தொழிற்பயிற்சி நிலையத்தின் தொழில்நுட்பவியலாளர் பாடநெறியை ஆரம்பிப்பதற்கு தேவையான உபகரணங்களின் ஒரு பகுதி மாத்திரம் வழங்கியமையின் காரணமாக குறித்த பாடநெறி ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) அஹங்கம பிரதேசத்தில் புதிய ஹோட்டல் பாடசாலையொன்றை நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டு அதில் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட 03 பாடநெறிகளுக்குத் தேவையான ரூபா 8,605,519 தொகையான பயிற்சி உபகரணங்கள் திறன்சார்ந்த அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் 2015 முதல் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், ஹோட்டல் பாடசாலையை நிர்மாணித்தல் 2016 மே வரையிலும் ஆரம்பிக்கப்படாதிருந்ததுடன் உபகரணங்கள் 2015 ஆம் ஆண்டு முதல் அருகிலுள்ள நிலையங்களில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அதிகாரசபையின் தொழிற்பயிற்சி நிலையம் தாபிக்கப்பட்டுள்ள 248 காணிகள் இருந்ததுடன் அதில் அரசாங்க துறைக்குச் சொந்தமான 178 காணிகளும், தனியார் துறைக்குச் சொந்தமான 70 காணிகளும் காணப்பட்டன. 2015 திசெம்பர் 31 வரையில் அரசாங்கத்தின் 32 காணிகளின் உரித்து மாத்திரம் உரித்து அதிகாரசபைக்கு முறையாகக் கையேற்கப்பட்டிருந்ததுடன் 60 காணிகளின் உரித்தைக் கையேற்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், எஞ்சிய 86 காணிகளையும் கையேற்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. தனியார் துறைக்குச் சொந்தமான காணியிலிருந்து 35 காணிகளுக்காக மாத்திரம் இருதரப்பினருக்கும் இடையே உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது.

(ஆ) 2006 சனவரி முதல் 2015 மே மாதம் வரை அதிகாரசபையின் உத்தியோகத்தர்களுக்குச் செலுத்தப்பட்ட வாழ்க்கைச் செலவுப் படி மற்றும் பாதீட்டு படிகளுக்குரிய ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியப் பங்களிப்புப் பணம் ரூபா 207,752,019 தொகை அதிகாரசபையினால் உரிய நிதியத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.

(இ) பாடநெறிக்காக விரிவுரையாளர் இல்லாமை, தொழிற்தகைமை மட்ட தரத்திற்குத் தேவையான உபகரணங்கள், வகுப்பறை வசதிகள் போன்றன பூர்த்தி செய்யப்படாமல் இரத்மலானை தேசிய தொழிற்பயிற்சி நிலையத்தில் வளி அமுக்க தொழில்நுட்பவியலாளர் பாடநெறியொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) அனுராதபுரம் மாவட்ட தொழிற்பயிற்சி நிலையத்தின் மோட்டார் வாகன மின்னியல் தொழில்நுட்பவியலாளர் பாடநெறியின் பயிற்சி நடவடிக்கைகளுக்காக 2012 மார்ச் 30 ஆந் திகதி வழங்கப்பட்ட ரூபா 1,639,729 பெறுமதியான 02 புதிய மோட்டார் வாகன பெற்றோல் இயந்திரங்கள் 2015 திசெம்பர் 31 வரையிலும் செயற்பாடற்ற நிலையில்

காணப்பட்ட போதிலும், அது தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

நிதி மோசடியின் அடிப்படையில் வேலை நீக்கஞ் செய்யப்பட்டு வழக்குத் தொடரப்பட்டிருந்த பணிப்பாளர் ஒருவருக்கு அங்கீகாரமின்றி சம்பளமாக ரூபா 1,711,961 தொகை செலுத்தப்பட்டிருந்த உத்தியோகத்தர் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

(அ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவழிக்கப்பட்ட ரூபா 266,968 பெறுமதியான லங்கா அசோக் லேலண்ட் பேரூந்து வண்டி இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது அனுராதபுரம் மாவட்ட அலுவலக வளவில் தரித்து வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) இரத்மலானை தேசிய தொழிற்பயிற்சி நிலையத்தின் ஒட்டுனர் பயிற்சி பாடநெறிக்கு உரித்தாகாத பெரிய தகரம் வளைக்கும் பொன்டின் இயந்திரம் மற்றும் தகரத்தை சுற்றும் உருளை இயந்திரம் ஒட்டுனர் பயிற்சி பாடநெறி வளாகத்தில் நீண்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டன.

(இ) அனுராதபுரம் மாவட்ட தொழிற்பயிற்சி நிலையத்தில் நடாத்தப்படுகின்ற சிற்றுண்டிச்சாலை ஊழியர் பாடநெறிக்குத் தேவையான உபகரணங்கள் காணப்படும் போது அது தொடர்பாக கவனத்தில் கொள்ளாது ரூபா 4,862,672 பெறுமதியான உபகரணங்கள் 2015 மே 06 ஆந் திகதி திறன்சார்ந்த அபிவிருத்தி செயற்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த உபகரணங்கள் விளைவற்றுக் காணப்பட்டன.

## 4.5 நிதியத்தின் குறைவான பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகளுக்காக மூடப்பட்டுள்ள இரண்டு நிலையங்களுக்கும் மேலும் இரண்டு நிலையங்களுக்கும் உரிய 05 வங்கிக் கணக்குகளில் ரூபா 201,737 தொகை பல வருட காலமாக விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் 2011 ஆம் ஆண்டின் போது பயிற்சி உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக வழங்கியிருந்த ரூபா 9,815,345 தொகை உரிய பணிகளுக்காக பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டது.

## 4.6 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரசபையின் வளங்கள்

திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சிற்கு ஒரு உத்தியோகத்தரும் முறையான அங்கீகாரமின்றி இரண்டு வாகனங்களும் வழங்கப்பட்டிருந்ததுடன் திறன் சார்ந்த அபிவிருத்தி செயற்திட்டத்திற்கு இரண்டு உத்தியோகத்தர்கள் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

## 4.7 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவனத்தின் பணிப்பாளர் (நிதி) பதவி 2015 ஏப்ரல் 30 ஆந் திகதி முதல் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் 2015 மே 05 ஆந் திகதி முதல் இந்தப் பதவியின் முழுநேர பதில் கடமைக்காக பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் நியமிக்கப்பட்டிருந்தார். எனினும் பணிப்பாளர்(நிதி) பதவிக்காக நிரந்தர உத்தியோகத்தரொருவர் 2017 பெப்ரவரி 28 ஆந் திகதி வரையிலும் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு மேற்கூறப்பட்ட உத்தியோகத்தரின் கீழ் கணக்காய்வு உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்பட்டமையினால் நிதிப் பிரிவின் கொடுக்கல் வாங்கல்கள் சுதந்திரமான உள்ளகக் கணக்காய்வின் கீழ் வராமைக்கு இடமளிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 2438 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணியினர் 1894 ஆனமையால் வெற்றிடங்கள் 544 ஆகக் காணப்பட்டது. வெற்றிடங்களில் 260 விரிவுரையாளர்கள் இருந்தமையினால் இலக்கிடப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்ட எண்ணிக்கைய நடாத்துவதற்கு முடியாதிருந்தது.

(இ) அதிகாரசபையின் ஆட்சேர்ப்பு நடைமுறையின் 5.1.1 ஆம் பிரிவின் பிரகாரம் விரிவுரையாளர் பதவிக்காக ஆட்சேர்க்கும் போது தேசிய தொழிற் தகைமையின் 5 ஆம் மட்டம் அல்லது அதற்கு மேற்பட்ட மட்டத்தின் கீழ் பெறப்பட்ட தொழில்நுட்ப விஞ்ஞான பாடநெறியொன்றைப் பின்பற்றி சித்திபெற்ற சான்றிதழொன்று பெறப்பட வேண்டியிருந்த போதிலும், 2014 ஆம் ஆண்டின் போது சேர்க்கப்பட்ட விரிவுரையாளர்கள் தொடர்பான தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பரீட்சிக்கப்பட்ட 91 கோவைகளில் 23 பேர்களும் அந்த தகைமைகளை அடையாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) அதிகாரசபையின் ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் பணிப்பாளர் (மனிதவள மற்றும் நிர்வாகம்) பதவிக்காக ஆட்சேர்ப்பினைச் செய்யும் போது வெளிவாரி மற்றும் உள்ளக விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு தாபன விதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 5.2.6 ஆம் பிரிவின் பிரகாரம் குறிப்பிட்ட உத்தியோகபூர்வ நேர் முகப்பரீட்சை சபையொன்றின் மூலம் தீர்மானிக்கப்படுகின்ற புள்ளி வழங்கும் திட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணானதாக 2015 யூன் 05 ஆந் திகதிய அதிகாரசபையின் தலைவரின் சிபாரிசுடன் பணிப்பாளர் சபையின் 08 அங்கத்தவர்களின் கையொப்பத்துடனான கடிதத்தின் பிரகாரம் அப்பதவிக்காக 2015 ஏப்ரல் 22 ஆந் திகதி முதல் உத்தியோகத்தரொருவர் முறையற்ற வகையில் நியமிக்கப்பட்டிருந்தார்.

(உ) விரிவுரையாளர்களின் மிகையொன்று காணப்படும் கொழும்பில் அமைந்துள்ள தேசிய தொழிற்பயிற்சி நிலையத்தில் சேவைக்காலம் 10 முதல் 16 வருடங்கள் வரையிலாக 6

விரிவுரையாளர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். பாடநெறியை நடாத்திச் செல்லும் போது இடையில் விரிவுரையாளர்கள் மாற்றப்பட்டமையால் பாடநெறியைத் தொடர்கின்ற பயிலுனர்களுக்கு பிரச்சினைகள் ஏற்பட்ட சந்தர்ப்பங்கள் இரத்மலானை மற்றும் அனுராதபுரம் மாவட்ட நிலையங்களின் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(ஊ) ஊகத்துறை தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் அதிகாரசபையினால் நடாத்தப்படாதிருந்த போதிலும் 2011 ஆம் ஆண்டின் போது அந்த துறைக்காக அடிப்படைத் தகைமைகளை பூர்த்தி செய்யாத பெண் விரிவுரையாளர் ஒருவர் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்தார். விரிவுரையாளர் பதவிக்குரிய பணிப்பொறுப்புக்கள் அவரால் நிறைவேற்றப்படாதிருக்கும் போது தொடர்ந்தும் சேவை நீடிப்பும் வழங்கப்பட்டிருந்ததுடன் 2014 ஆம் ஆண்டின் போது தகவல் தொழில்நுட்ப விரிவுரையாளராக துறை மாற்றப்பட்டிருந்தார். அந்த துறையினதும் பணிப்பொறுப்புக்கள் முறையாக நிறைவேற்றப்படாதிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டு முதல் அங்கீகரிக்கப்பட்ட வேலைத்திட்டமொன்று காணப்படாதிருந்த போது வாரத்தில் 03 நாட்கள் ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றிய இந்த பெண் உத்தியோகத்தர் ஊடாக இணைப்பாளர் நடவடிக்கைகளுக்காக விடுவிப்பதற்கு உயர் முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருந்தது.

### 4.8 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடு

புனரமைப்பிற்கு உத்தேசிக்கப்பட்ட எஹெலியகொடை, மாபாகட வெவ, பிங்கிரிய, பத்தேகம மற்றும் வெல்லவாய போன்ற 05 நிலையங்களை நிர்மாணித்தல் தொடர்பான மதியுரைச் சேவைகளை வழங்குவதற்காக 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 2,130,290 செலவிடப்பட்டிருந்த போதிலும், 2016 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் அந்த நிர்மாணங்களுக்கான கொள்வனவு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் 2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(i) ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணம் 133 என்பவைகளில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டங்கள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டில் நிறுவனத்திற்குரிய 12 உத்தியோகத்தர்களைக் கொண்ட உள்ளகக் கணக்காய்வு அலகொன்று தாபிக்கப்பட்டிருந்தும் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தை திட்டமிடல், அமுல்படுத்துதல் மற்றும் பின்தொடர் நடவடிக்கை என்பவற்றில் காணப்பட்ட குறைபாடுகளின் காரணமாக அந்த பிரிவினை நடாத்திச் செல்வதால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 5.2 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 யூன் 10 ஆந் திகதி விபத்திற்குட்பட்ட வாகனமொன்று தொடர்பாக 2014 யூலை 30 ஆந் திகதி வரை நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பரிசோதனை நடாத்தப்பட்டிருக்கவில்லை. சாரதிக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு

தொடரப்பட்டிருந்ததுடன் குற்றத்தை ஏற்றுக்கொண்டு தண்டப்பணத்தைச் செலுத்துதல், விபத்தின் போது மூன்றாம் தரப்பினருக்கு ஏற்பட்ட ரூபா 255,950 நட்டத்தையும் செலுத்துமாறு 2012 மே 04 ஆந் திகதி அழைப்பாணையொன்று அனுப்பப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பில் 2015 யூலை 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பாவனையிலிருந்து அகற்றப்பட்ட நடைமுறையல்லாச் சொத்துக்களின் கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத்தேய்வு என்பன சொத்துக்களை பாவனையிலிருந்து அகற்றப்படும் சந்தர்ப்பத்தில் சொத்துக்கள் அகற்றல் கணக்கொன்றினூடாக கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டு இலாபம் அல்லது நட்டமானது உரிய ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட வேண்டுமெனினும், 2009 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரையிலும் அகற்றப்பட்ட எந்தவொரு சொத்தினதும் பெறுமதி, சொத்துக்கள் கணக்கு மற்றும் திரண்ட பெறுமானத்தேய்வு கணக்கிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) 2006 சனவரி 17 ஆந் திகதி முதல் அதிகாரசபையின் தலைவரினால் பிரதி பணிப்பாளரொருவர் மத்திய கலாசார நிதியத்தின் நிர்வாக சபையின் அங்கத்தவர் மற்றும் செயற்பாட்டுப் பணிப்பாளர் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக வராத்திற்கு 3 தடவைகளும் நிர்வாக சபையின் கூட்டம் நடைபெறுகின்ற திகதிகளில் பங்குபற்றுவதற்காகவும் சம்பளத்துடன் விடுவிக்கப்பட்டிருந்தார். 2014 ஆம் ஆண்டு வரையிலும் அந்த உத்தியோகத்தர் இந்த இரண்டு நிறுவனங்களிலும் சேவையில் ஈடுபட்டிருந்தார். அதிகாரசபையில் சம்பளம் பெற்றதுடன் மத்திய கலாசார நிதியத்திலிருந்தும் படியாக ரூபா 5,444,015 தொகையைப் பெற்றிருந்தார்.

2014 செப்தெம்பர் 12 ஆந் திகதி நடைபெற்ற இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை தொடர்பான பொது முயற்சிகள் குழுகூட்டத்தின் போது அதிகார சபையிலிருந்து சம்பளம் பெறுவதற்கு மேலதிகமாக ஏனைய நிறுவனங்களிலிருந்து சம்பளம் பெற்றுக்கொள்ளல் தொடர்பான சனாதிபதி செயலாளரிடம் விசாரித்து ஆலோசனை பெற்றுக்கொள்ளுமாறு செயலாளருக்குக் கட்டளையிடப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அதிகாரசபையின் ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் பிரகாரம் தகைமைகள் அல்லது அனுபவங்கள் பூர்த்தி செய்யப்படாதிருக்கும் போது, பணிப்பாளர் நாயகம், பணிப்பாளர் (திட்டமிடல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி), பணிப்பாளர் (தொழில் வழிகாட்டி, வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் மேம்படுத்தல்) மூன்று பிரதி பணிப்பாளர்கள், இரண்டு உதவி பணிப்பாளர்கள் மற்றும் சட்ட உத்தியோகத்தர் பதவிகளுக்காக ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. மேலும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் இல்லாத உதவி பணிப்பாளர் (நிதி) பதவிக்காக உத்தியோகத்தரொருவர் சேர்க்கப்பட்டிருந்தார்.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுகளிலான குறைபாடுகள் அவ்வப்போது நிறுவனத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்பட வேண்டியுள்ளது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) பதவியணியினர் நிர்வாகம் | - ஆட்சேர்ப்பில் ஆகக் குறைந்த தகைமையைப் பூர்த்தி செய்யாத உத்தியோகத்தர்களைச் சேர்த்தல் |
| | - நேர்முகப்பரீட்சை மற்றும் செயன்முறைப் பரீட்சை சபைகள் முறையாக அமுல்படுத்தப்படாமை |
| | - முறையான இடமாற்றத்திட்டமொன்று அமுல்படுத்தப்படாமை |
| (ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம் | - முறையான நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்படாமை |
| | - சொத்துக்களை இனங்காணும் குறியீடுகள் பயன்படுத்தப்படாமை |
| | - விளைவற்ற சொத்துக்கள் காணப்பட்டமை |
| | - சகல சொத்துக்களும் பொருட்பதிவேடுகளுக்கு எடுக்கப்பட்டமை உறுதிப்படுத்தப்படாமை மற்றும் சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை. |
| **(இ) வருமான நிர்வாகம்** | |
| i பயிலுனர் படிகள் | - பயிலுனர் படி பெற்றமைக்கு பயிலுனர்களின் உறுதிப்படுத்தலொன்று பெறப்படாமை |
| | - படிகள் கணிப்பிடப்படும் முறைமையில் வேறுபாடு காணப்பட்டமை. |
| ii பாடநெறிக் கட்டணம் | - பாடநெறிக் கட்டணம் வங்கியிலிடப்படாமல் விரிவுரையாளர்களினால் பணமாகவே பெறப்பட்டமை. |
| | - சகல பகுதிநேர பாடநெறிகளுக்காகவும் அரசிறை அறவிடப்பட்டமை உறுதிப்படுத்தப்படாமை மற்றும் ஏனைய வருமானமொன்றாக இனங்கண்டு கணக்குகளில் வைக்கப்படாமை |
| (ஈ) நிதிக் கட்டுப்பாடு | - பணிப்பொறுப்புக்களைப் பகிர்ந்தளித்தல் மற்றும் அவை உள்ளகப் பரீட்சிப்பிற்கு உட்படும் வகையில் அமுல்படுத்தப்படாமை |

- மேற்பார்வை நடவடிக்கைகள் உரிய பிரகாரம் அமுல்படுத்தப்படாமை

- செலவினங்களில் வங்கியால் செலுத்தப்பட்ட பெறுமதிக்கும் பேரேட்டில் குறிப்பிடப்பட்ட பெறுமதிக்கும் இடையே வேறுபாடுகள் காணப்பட்டமை.